## சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை – உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்க ரூ.14,85,286/– ஒப்பளிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (எஸ்1)த் துறை

அரசாணை (நிலை) எண். 22

நாள் 08.03.2022
பிலவ, மாசி 24
திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கப்பட்டது :–

1. அரசாணை (நிலை) எண் 74, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(எஸ்1)த் துறை, நாள் 24.08.2009
2. சிறுபான்மையினர் நல இயக்குநரின் கடித எண்.அ6/ 2171/2021, நாள் 18.08.2021 (ம) 14.12.2021.

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, உலமாக்கள் மற்றும் இதர பணியாளர்கள் சமூக பொருளாதாரம் மற்றும் கல்வி நிலைகளில் திட்டமிடப்பட்ட உறுதியான முன்னேற்றத்தை அடைவதற்கென உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட சிறுபான்மையினர் நல இயக்குநரின் கடிதத்தில், உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்திற்கென துவங்கப்பட்ட பொது வைப்புக் கணக்குத் தலைப்பில் 2009–10–ஆம் ஆண்டு முதல் 2018–19–ஆம் ஆண்டு வரையிலான வரவு–செலவு திட்டங்களின் கீழ் ரூ.5.53 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டதில், இதுவரையில் மேற்படி வாரிய உறுப்பினர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் கல்வி உதவித் தொகை, விபத்து நிவாரணம், ஓய்வூதியம் மற்றும் இயற்கை மரண நிவாரணம் போன்ற நலத்

திட்டங்களின் மூலம் பயனடைந்த வகையில் ரூ.5.35 கோடி நலத்திட்ட உதவிகளுக்காக செலவிடப்பட்டு, தற்போது பொது வைப்புக் கணக்கில் ரூ.17,39,714/- மட்டுமே இருப்பில் உள்ளதால், இனிவருங்காலங்களில், உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர் மற்றும் அவர்களின் குடும்ப உறப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவதில் தொய்வு ஏற்பட வாய்ப்பு உள்ளதால், 2021-22-ஆம் நிதியாண்டின் திருத்திய மதிப்பீட்டில் ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு சிறுபான்மையினர் நல இயக்குநர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. சிறுபான்மையினர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்குவதற்காக 2021-22-ஆம் நிதியாண்டிற்கு ரூ.14,85,286/- (ரூபாய் பதினான்கு இலட்சத்து எண்பத்தைந்தாயிரத்து இருநூற்று எண்பத்தி ஆறு மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :-

"2225 – ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 80 பொது – 800 – ஏனைய செலவு – மாநிலச் செலவினங்கள் – JJ – உலமாக்கள் மற்றும் ஏனைய பணியாளர்களுக்கான நல வாரியம் – 309 உதவித் தொகை – 01 நடப்புச் செலவுக்கான உதவித் தொகை".

(IFHRMS த.தொ.கு 2225 – 80 – 800 – JJ – 30901).

5. மேலே பத்தி 3-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.14,85,286/- 2021-2022-ஆம் ஆண்டிற்கான இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினம் 2021-2022-ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டு, சட்ட மன்றப் பேரவையில் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும். இச்செலவினம் இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படுவதை எதிர்நோக்கி, மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினைப் பெற்று வழங்கிட சிறுபான்மையினர் நல இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும், பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்தை 2021-2022-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது உரிய நேரத்தில் நிதித்(பி.மி.பி /வ.செ.

பொ–II) துறைக்கு அனுப்பி வைக்குமாறும், மேலும், பத்தி 3–ல் அனுமதிக்கப்பட்ட செலவினம் தவிர்த்து மீதித் தொகை இருக்கும் பட்சத்தில், உரிய அரசு கணக்குத் தலைப்பில் சரண் செய்யுமாறும் சிறுபான்மையினர் நல இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.கு. எண். 10282 / நிதி(பி.மிபி)/2022, நாள் 07.03.2022–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1793 (ஆயிரத்து எழுநூற்று தொண்ணூற்று மூன்று).

//ஆளுநரின் ஆணைப்படி//

ஆ.கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், சிறுபான்மையினர் நலத் துறை, சென்னை – 5.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 5.
மாநிலக் கணக்காயர், சென்னை–18/35.
மாநிலக் கணக்காயர் (தணிக்கை–I&II), சென்னை–18.

<u>நகல் :–</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலர், சென்னை–9.
நிதி(வரவு–செலவு பொது I, II / பி.மி.பி) துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு/உபரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

8/3/2022
பிரிவு அலுவலர்

8/3/22